திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டுக்குள் முடிவடையும் என்று சொன்னார்கள். திருப்பூர் நகரத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் சக்தி 66 கேவி வாட்ஸ்தான் இருக்கிறது. சக்தி குறைவாக இருப்பதால், அடிக்கடி தொழிற்சாலைகளில் வேலை தாமதமாகிறது. இதனால் உற்பத்திக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட தொழிற்கூடங்கள் இருக்கிற காரணத்தால் 1 ஆண்டுக்குள் வேலை முடியுமென்றிருப்பதை, அதிக ஆட்கள் வேலைக்கு வைத்து 6 மாதத்திற்குள் செய்து முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அரசு அப்படிக் கருதிய காரணத்தால்தான் அங்கே பெரிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய சாதனங்கள் கொண்டு வருவதற்கு வேண்டிய ரயில்வே வாகன்கள் கிடைப்பதில் கஷ்டமாக இருக்கிறது. கூடியவிரைவில் செய்து முடிக்க முயற்சிக்கப்படும்.

## பள்ளிக்கொண்டா ஊராட்சிக்கருகில் விபத்து.

* 590 வினா : திரு. எம். ஏ. லத்திப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 31—10—1971 அன்று காலையில் சென்னை—பங்களூர் நெடுஞ்சாலையில் பள்ளிக்கொண்டா பஞ்சாயத்திற்கருகில் வாகன மோதலால் அடிபட்டு இறந்த ஒருவரின் சடலம் கிடந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், மோதிவிட்டு ஓடிவிட்ட நபர் (Hit and Run) யாரென கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு .எம். ஏ. லத்திப் : இப்படி மோதி விட்டு ஓடிப்போன நபர் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? செத்தவர் யார் என்று கண்டு பிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. பெரியப்பக்கவுண்டர் மகன் கணேசன் என்பவர் அப்படி மோதி ஓடி

**1972 மார்ச் 20]**

விட்ட லாரியாலோ, மற்ற வாகனத்தாலோ இறந்து விட்டார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மோதிவிட்டு ஓடிப்போன வாகனம் எவ்வளவோ முயற்சி செய்தும் இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்து வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் நடந்து வருகின்றன. இப்படி சென்ற ஆண்டு மோதிவிட்டு ஓடிவிட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? இரவு நேரங்களில் லாரி ஓட்டுபவர்கள் மிகவும் வேகமாக ஓட்டுவ தால் இப்படி நடக்கிறது. இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கடந்த ஆண்டு எத்தனை பேர் இறந்தார்கள் என்ற கணக்கு இல்லை. ஆனால் பொதுவாக இரவு நேரங்களில் இதைப்போன்று மோதிவிட்டு ஓடிப்போகிற வர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை அளிப்பதற்காக வேண்டிய நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மோதிவிட்டுச் சென்ற வண்டிகளின் டயர்களின் பதிவுகளை போட்டோ எடுப்பதன் மூலமும், கண்ணாடித் துண்டுகள் சிதறி இருந்தால் அவைகளைச் சேகரித்து போரன்சிக் லாபரேடரிக்கு அனுப்பி சோதனை செய்து, அந்தமாதிரி வண்டிகள் எங்காவது இருக்கிறதா என்று வண்டிகள் நிற்குமிடங் களில் சோதனையிட்டும், காவல்துறையினர் இதைக் கண்டுபிடிக்க முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அந்த முறை ஓரளவுக்கு வெற்றி கரமாக நடந்து வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த போரஸிக் லாபரேடரியில் எத்தனை கேஸ்களில் இம்மாதிரியாக டயர்கள் பதிவு எடுப்பதன் மூலம், கண்ணாடித் துண்டுகளைப் பரிசோதிப் பதன் மூலம் துப்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றிச் சொன்னேன். அந்த விவரம் இல்லை.